www.tamilarangam.net

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

**180**

## கடல் நடுவே பரிதவிப்பு

**வ**டக்கு-கிழக்கு மாகாண முதல்வர் வரதராஜப் பெருமாள், ஈ.பி.ஆர்.எல்.எஃப். செயலாளர் நாயகம் பத்மநாபா ஆகியோரை விசேஷ விமானங்களில் அழைத்துச் செல்வதே பாதுகாப்பானது என்று இந்திய அரசு முடிவு செய்திருந்தது.

ஏனைய முக்கிய பிரமுகர்கள் அவர்களது குடும்பத்தினர் உட்பட ஆயிரத்தி முன்னூறு பேரை கப்பலில் கொண்டு செல்ல ஏற்பாடு செய்யப்பட்டது.

கப்பலுக்காக மூன்று நாட்கள்வரை அத்தனைபேரும் கடற்கரை முகாம் ஒன்றில் காத்திருந்தனர்.

**கப்பல் எப்போது வந்து நங்கூரமிடும் என்ற தகவல் இரகசியமாக வைக்கப்பட்டிருந்தது. புலிகள் தாக்கலாம் என்று கருதியே அவ்வாறான இரகசிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.**

கப்பல் திருமலை துறைமுகத்திற்கு வந்து சேர்ந்ததாக தகவல் கிட்டியதும், முகாமில் காத்திருந்த அனைவரும் ட்ரக் வண்டிகளில் ஏற்றப்பட்டு, வெளியே தெரியாமல் இறுகமூடப்பட்டு துறைமுகத்திற்கு கொண்டு செல்லப்பட்டனர்.

கப்பலில் ஏறியதும் சபாநாயகர் இராஜகாரியர் வி.ஐ.பிக்கள் அனைவரும் தனியாக வருமாறும், நல்ல வசதியான் இடம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும் அழைத்தார்.

**இயக்கரீதியாக, இயக்கத்தின் உறுப்பினர்களுடன் இணைந்து வளராத பலரை பத்மநாபா இயக்க முக்கியஸ்தர்களாக மாற்றினார். இயக்கத்தின் மேல் திணித்தார் என்றும் கூறலாம்.**

அத்தகையோர் கஷ்டம் வரும்போது உறுப்பினர்களை தவிக்கவிட்டுவிட்டு தங்கள் நலன்களில் நாட்டம் காட்டுவது தவிர்க்க முடியாதது. அதற்கு ஒரு உதாரணம்தான் இராஜகாரியரின் இன்ப நாட்ட ஆர்வம்.

சில உறுப்பினர்கள் கெட்ட வார்த்தைகளால் திட்டியதோடு, இராஜகாரியர் போன்றோரை தூக்கி கடலில் எறியலாம் என்றனர். சுபத்திரன் போன்றோர் தலையிட்டு தடுத்ததால்தான் கப்பலுக்குள் பிரச்சனை ஏற்படாமல் போனது.

நள்ளிரவில் கப்பல் புறப்பட்டு சென்னை நோக்கி சென்றது. இரகசியம் காக்கும் நோக்கத்தோடு கடைசி நேரத்தில்தான் தமிழக அரசுக்கும் தகவல் கொடுக்கப்பட்டது.

கப்பலில் வரும் போராளிகளை சென்னை துறைமுகத்தில் இறக்கி, தமிழ் நாட்டில் பாதுகாப்பான முகாமில் தங்க வைக்கலாம் என்று மத்திய அரசு தமிழக அரசுக்கு தகவல் அனுப்பியது.

தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதிக்கு வந்ததே கோபம்.

**"முடியவே முடியாது, அவர்களை இங்கே தமிழ் நாட்டில் ஏற்கவே முடியாது" என்று ஒரேயடியாக அடித்துக் கூறிவிட்டார்.**

சென்னை துறைமுகத்தில் ஆயிரத்தி முன்னூறு பேருடன் கப்பல் தரித்து நின்றது.

### அந்தமான் தீவு

இந்திய அரசுக்கு கலைஞர் கருணாநிதி ஒரு யோசனையும் தெரிவித்தார்.

**'கப்பலில் உள்ள போராளிகள் அனைவரையும் அந்தமான் தீவுக்கு அனுப்பி வையுங்கள். அங்கு சென்றால் இயக்க மோதல்கள் இல்லாமல் இருந்து கொள்வார்கள்' என்று கூறினார் கருணாநிதி.**

இச் செய்தி கப்பலில் இருந்த போராளிகளுக்கு எட்டிவிட்டது. தமிழக அரசின் தடையையும்மீறி மாலைமலர் பத்திரிகை நிருபர் கப்பலில் இருந்த போராளிகளை சந்தித்திருந்தார்.

**'தங்கள் தலைவர்களும் தம்மோடு கப்பலில் இல்லை. தமிழக அரசும் தங்களை ஏற்க் மறுக்கிறது. தாங்கள் அநாதைகளாகிவிட்டோமே' என்று கப்பலில் இருந்த பலர் வேதனையடைந்தனர்.**

அந்தமானுக்கு தங்களை அழைத்துச் சென்றால் கப்பலை கடத்தி திசை திருப்புவது என்றும் கப்பலுக்குள் இருந்த ஒரு சாரார் திட்டமிட்டனர்.

இந்திய சுதந்திரப் போராட்ட காலத்தில் பிரிட்டிஷ்காரர்களது சிறையாக விளங்கிய இடம்தான் அந்தமான்தீவு.

'அங்கு போவதைவிட கடலில் குதித்து சாகலாம்' என்றனர் சிலர். கப்பலுக்குள் ஒரே குழப்பம்.

தமிழக அரசு விட்டுக்கொடுக்காது என்று தெரிந்ததால் இந்திய மத்திய அரசு, கப்பலை விசாகபட்டினம் துறைமுகத்திற்கு கொண்டு செல்லுமாறு கட்டளையிட்டது.

ஆந்திர மாநிலத்தில் இருப்பதுதான் விசாகப்பட்டினம். ஆந்திர மாநிலத்தில் அப்போதும் காங்கிரஸ் கட்சியே பதவியில் இருந்தது.

விசாகப்பட்டினத்தில் போராளிகள் தரையிறங்க ஆந்திர மாநில அரசு தடையேதும் கூறவில்லை. காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயே இந்தியப் படை அனுப்பப்பட்டது. எனவே ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினரை தமது நண்பர்கள் போன்றே ஆந்திர மாநில காங்கிரஸ்காரர்கள் மதித்தனர்.

விசாகப்பட்டினத்தில் கப்பலில் இருந்து இறங்கியவர்களுக்கு குதூகலமான வரவேற்பு அளிக்கப்பட்டது. விருந்தும் தரப்பட்டது.

**அதற்கு முன்னர் கப்பல் விசாகப்பட்டினம் சொல்லும்போது கப்பலில் இருந்தவர்களுக்கு பலத்த சந்தேகம்.**

**'அந்தமானுக்குள்தான் தள்ளிவிட்டு வரப்போகிறார்களோ' என்பதுதான் சந்தேகம்.**

ஈ.பி.ஆர்.ஏல்.எஃப். படகோட்டிகள் சிலரும் கப்பலில் பயணம் செய்தனர். அவர்கள் கப்பல் செல்லும் திசையை அவதானித்து; 'அந்தமான் நோக்கிச் செல்லவில்லை' என்பதை உறுதிப்படுத்தினார்கள்.

விசாகப்பட்டினத்தில் சிறிது ஓய்வு எடுத்த பின்னர் அத்தனை பேரும் பஸ் வண்டிகளில் ஏற்றப்பட்டனர்.

பஸ் வண்டிகளில், ஆயிரத்தி முன்னூறு பேரும் எங்கு செல்கிறோம் என்பதே தெரியாமல் சோகமே வடிவாக அமர்ந்திருந்தனர்.

பஸ் வண்டிகள் போகின்றன. போகின்றன. போய்க்கொண்டே இருக்கின்றன.

ஆந்திர எல்லையை தாண்டி ஒரிசா மாநிலம் நோக்கி புழுதியைக் கிளப்பியபடி பஸ் வண்டித் தொடர் விரைந்தது.

### ஒரிசா மாநிலம்

இந்தியாவில் மிகப்பின்திங்கிய மாநிலங்களில் ஒன்று ஒரிசா மாநிலம்.

அங்குதான் ஆயிரத்தி முன்னூறு பேரையும் தங்கவ்வக்க மத்திய அரசு தீர்மானித்திருந்தது.

இத் தகவல் எப்படியோ ஒரிசாவில் உள்ள பொது அமைப்பு ஒன்றுக்கு எட்டிவிட்டது.

பஸ் செல்லும் பாதையில் குறுக்கே விழுந்து படுத்துவிட்டனர்.

"ஒரிசாவுக்குள் நுழைய விடோம்" என்று கோஷம் போட்டனர்.

பஸ்களில் இருந்தவர்ளுக்கு வாழ்க்கை வெறுத்துவிட்டது. சிலர் தங்களை தவிக்கவிட்டுவிட்டு விமானத்தில் தப்பியோடிய தலைவர்களை வசைபாடினார்கள்.

பின்னர் எப்படியோ குறுக்கே கிடந்தவர்களை சமாதானப்படுத்திவிட்டு அத்தனை பேரையும் ஒரிசாவுக்கு கொண்டு போய் சேர்த்தனர் ஒரிசா பொலிசார்.

### பெருமாள் ஜோக்

இந்தியப் படையினர் திருமலையில் இருந்து வெளியேற முன்னர் வரதராஜப் பெருமாள் குடும்பத்தினர் தனியான விமானத்தில் புறப்பட்டு சென்றனர்.

இன்னொரு விமானத்தில் பத்மநாபா ஒரிசாவுக்கு கொண்டு செல்லப்பட்டார்.

நாட்டைவிட்டு வெளியேறும் தருணத்தில் ஈழப் பிரகடனம் செய்தார் அல்லவா பெருமாள்.

அதுபோல, நாட்டை விட்டு வெளியேறுவதற்கு பெருமாள் கூறிய காரணமும் சுவையானது.

**"அயுதப் பயிற்சி பெறுவதற்காகவே செல்லுகிறேன். பெற்றுக்கொண்டதும் திரும்பி வருவேன்" என்றார்.**

அதுவும் பத்திரிகைகளில் வெளியாகி சிறந்த ஜோக்காக பலரை சிரிக்க வைத்தது.

அதே சமயம் இலங்கையின் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சராக இருந்த ரஞ்சன் விஜயரத்னாவும் ஜோக்கடித்தார்.

"வடக்கு-கிழக்கு மாகாண முதலமைச்சர் மிஸ்டர் பெருமாள் எங்கிருக்கிறார்?" என்று நிருபர் ஒருவர் கேட்டார்.

அதற்கு ரஞ்சன் சொன்ன பதில் இது: "இராஜஸ்தானில் சீனி ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளார்."

### புலிகளின் கட்டுப்பாடும்

இந்தியப் படை முற்றாக விலக்கிக் கொள்ளப்பட்டதை அடுத்து வடக்கு-கிழக்கு முழுவதும் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நடத்திய கூட்டங்களில் பெரும் திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

இந்தியப் படை திருமலையில் நிலை கொண்டிருந்த காலத்தில் வவுனியா போன்ற பகுதிகளில் மக்கள் முன்னணி நடத்திய கூட்டங்களிலும் பல்லாயிரக்கணக்காக மக்கள் கலந்து கொண்டனர்.

ஏனைய இயக்கங்கள் கூட்டங்களை குழப்பலாம் என்று அச்சுறுத்தல் இருந்த போதும், புலிகளின் கூட்டங்களுக்கு தாமாகவே மக்கள் திரண்டனர்.

**மீண்டும் ஆயுதப் போராட்டம் தொடரும் என்பதை கூட்டங்களில் மறைமுகமாக புலிகள் உணர்த்தினார்கள்.**

இந்தியப் படையினர் வெளியேறிய பின்னர் திருமலையில் புலிகள் தேடுதல் வேட்டையில் இறங்கினார்கள்.

இந்தியப் படையினருடன் நின்ற இயக்கங்கள் புதைத்துவைத்துவிட்டுப் போன ஆயுதங்களை தேடியே வேட்டை நடந்தது.



## எண்ணிக்கை இன்றி மாண்ட உறுப்பினர்கள்

மக்களும் புலிகளுக்கு தகவல் கொடுத்தனர். இரண்டு நாளில் மட்டும் ஏழு லொறிகள் நிரம்ப புலிகளால் ஆயுதங்கள் ஏற்றிச் செல்லப்பட்டன.

இதற்கிடையே பல நூற்றுக்கணக்கான ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்கள் கடல் நடுவே வைத்து புலிகள் நடத்திய தாக்குதல்களில் பலியாகினர்.

'புலிகளுக்கு எதிரான யுத்தம்' என்று வாய்வீச்சுக்களுடன் தங்கள் உறுப்பினர்களை ஆயுதங்களுடன் இறக்கியவர்கள், அவர்கள் தப்பிச் செல்லக்கூட உரிய ஏற்பாடுகளை செய்யத் தவறினார்கள்.

குதிரை வலு (HORSE POWER)க்குறைந்த மோட்டார் இயந்திரங்கள் பொருத்தப்பட்ட படகு களிலேயே சாதாரண உறுப்பினர்கள் ஏற்றப்பட்டனர்.

**குதிரைவலு கூடிய மோட்டார் இயந்திரங்கள் பொருத்தப்பட்ட படகுகளில், சுருட்டிய பணத்துடனும், நகைகளுடனும் முக்கிய பொறுப்பாளர்கள் தப்பிச் சென்றனர்.**

படகுகளில் ஏற்றப்பட முன்னர் எந்தப் படகில் யார் செல்கிறார்கள் என்ற பெயர் விபரத்தை குறித்துக் கொள்ளக்கூட பொறுப்பான ஆளில்லை.

புலிகள் தங்கள் இயக்க உறுப்பினர்களை கொன்று விட்டனர் என்று ஏனைய இயக்கத் தலைவர்கள் கண்ணீர் வடிப்பதையே சந்தேகக் கண்கொண்டு நோக்க வைக்கக்கூடிய சோகம் அன்று நிகழ்ந்தது.

தங்கள் பல நூற்றுக்கணக்கான தோழர்களை, எப்படியாவது தப்பி வந்து சேருங்கள் என்று விட்டுவிட்டு விமானத்தில் பறந்து தப்பிப் போனார்கள் இயக்கத் தலைவர்கள்.

கப்பல்கூட தாக்கப்படலாம் என்று இந்திய படையினர் எத்தனை முன்னெச்சரிக்கையாக நடந்து கொண்டனரோ, அதில் ஒரு பங்கு முன்னெச்சரிக்கைகூட இயக்கத் தலைவர்களுக்கு இருக்கவில்லை.

கடலில் புலிகள் தாக்குவார்கள். ஓடித்தப்ப முடியாத படகுகளில் செல்வது ஆபத்து என்பதைக்கூட ஊகிக்க முடியாத தலைமைகள்தான் ஏனைய இயக்கங்களுக்கு வாய்த்திருந்தன.

**தங்கள் உறுப்பினர்களை பலிகொடுத்தபடி வாய்வீச்சுக்கள் மூலம் தங்களை வளர்த்துக் கொண்டவர்கள் உயிர் தப்பிக் கொண்டனர்.**

### முகுந்தன்

ஆக, ஒரே ஒரு முக்கிய பொறுப்பாளர்தான் உறுப்பினர்களைப் போல தானும் வலுக்குறைந்த படகில் சென்றார்.

தமிழ்த் தேசிய இராணுவத் தளபதியாக இருந்த முகுந்தன்தான் அவ்வாறு உறுப்பினர்களுடன் சென்றார்.

முகுந்தன் சென்ற படகு நடுக்கடலில் வைத்து புலிகளால் சுற்றிவளைக்கப்பட்டது.

முகுந்தனும் அவருடன் சென்றவர்களும் கைது செய்யப்பட்டனர்.

முகுந்தன் இந்திய இராணுவத்திடமும் பயிற்சி பெற்றவர். பின்னர் லெபனான் சென்றும் பயிற்சி பெற்றவர். பேராதனை பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராக இருந்தவர்.

1983ல் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தில் சேர்ந்தவர். ரமேஷ், சுபத்திரன் ஆகியோர் இவரை இந்தியப் பயிற்சி பெற தெரிவு செய்து அனுப்பி வைத்தனர்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த முகாம் ஒன்றுக்கு முகுந்தனை புலிகள் இயக்கத்தினர் அலைத்துச் சென்றனர்.

**"நாம் தோற்றுவிட்டோம். எம் தலைவர்கள் கைவிட்டு விட்டனர். இனிமேல் நீங்கள் உயிர்தப்ப வேண்டுமானால், உண்மை களை இவர்களுக்கு கூறுங்கள். ஆயுதங்கள் எங்காவது மறைத்து வைத்திருந்தால் எடுத்துக் கொடுத்து விடுங்கள்" என்று முகுந்தன் கூறினார்.**

அதன்பின்னர் முகுந்தனை யாரும் எங்கும் காணவில்லை.

படகுகளில் சென்றவர்கள் யார் அதிலே மாண்டவர்கள் யார்? போன்ற எந்த விபரங்களும் இயக்கங்களிடம் கிடையாது.

எவ்வித தடயமும் இல்லாமல் அந்த பல நூற்றுக்கணக்கான உறுப்பினர்களில் கதை முடிந்தது.

**இந்தியப் படையோடு சேர்ந்து நின்ற இயக்கங்கள் அதன்பின்னர் பல நினைவு தினங்களை அனுஷ்டித்து வந்துள்ளனர்.**

**அவற்றில் ஒன்றுகூட இந்தியப் படை காலத்தில் பலியான தோழர்களுக்கானவை அல்ல என்பது நன்கு கவனிக்கப்படவேண்டியதாகும்.**

இந்தியப் படையுடன் நின்று புலிகளுடன் போரிட்ட தங்கள் உறுப்பினர்களது உயிர்ப் பலிகளை நினைவு கூறுவது மக்களிடையே வரவேற்பு பெற மாட்டாது, என்று நினைக்கிறார்கள்.

இந்தியப் படை காலத்திய தங்கள் அத்துமீறல்களை மீண்டும் நினைவுகூரச்செய்து, தேர்தல்களில் வாக்குகள் கிடைக்காமல் செய்துவிடும் என்று தலைமைகள் தயங்குகின்றன.

### வெளியே

புலிகளின் தலைவர் பிரபாகரன் விரைவில் மக்கள்முன் தோன்றுவார் என்று புலிகள் அறிவித்தனர்.

வதந்திகளின் பின்னர் பிரபாகரன் முதன் முதலில் வெளியே வரும் செய்தி பரபரப்பாக பேசப்பட்டது.

பத்திரிகைக் காரியாலயங்களுக்கு ஒரு தகவல் புலிகளால் அனுப்பப்பட்டது.

பத்திரிகையாளர் மாநாடு ஒன்று நடைபெற இருக்கிறது என்பதுதான் செய்தி.

செய்தி இனித்தது. திகதியைப் பார்த்தவர்களுக்கு ஏமாற்றமாகிவிட்டது ஏப்ரல் முதலாம் திகதி.

ஆனால் ஏப்ரல் முதலாம் திகதி பத்திரிகையாளர் மாநாடு நடைபெற்றது. பத்திரிகையாளர்களுக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

இனிவரும் வாரங்களில்தான் முதலாம் ஈழப்போருக்கான திருப்பங்களும் காத்திருக்கின்றன. (தொடர்ந்து வரும்)

### இது அவர் அல்ல



**பிரபாகரன் கொல்லப்பட்டுவிட்டார் என்று வரதராஜப் பெருமாளும், இந்திய உளவு நிறுவனங்களும் பிரசாரம் செய்தபோது, தமிழக நக்கீரன் சஞ்சிகை வெளியிட்ட அட்டைப்படம்தான் இது. பிரபாகரன் கொல்லப்பட்டதாக செய்தி வெளியிட்ட தினமலர் பத்திரிகையை பிரபாகரன் படித்துக்கொண்டிருக்கிறார்.**

**இப்படத்தில் தலைமட்டும்தான் பிரபாகரனுடையது. பிரபாகரன் உயிருடன் இருப்பது உறுதியான பின்னர் நக்கீரன் உண்மையை வெளியிட்டது. இதுபற்றி இத் தொடரில் ஏற்கனவே விபரித்திருந்தோம். இப்போதுதான் அந்த அட்டைப்படம் கைக்கு கிடைத்தது. வெளியிட்டுள்ளோம்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்